# சமூக விஞ்ஞான சுடர்

## அறிமுகன்
&
## இதழ்ச் சுருக்கம்

வெளியிடுவோர் :

சமூக விஞ்ஞான வெளியீட்டகம்

THOONDIL
Südasien-Büro
Große Heimstr. 58
4600 Dortmund

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சமூக விஞ்ஞான சுடர்

# 1-வது இதழ்

## உள்ளடக்கச் சுருக்கம்

உள்ளடக்கம்.


1. அறிமுகம்
2. அணிந்துரை
3. மனிதனும் மிருகமும்
4. சமூகச் சிதைவை ஈடுசெய்ய காந்திய தீர்வு
5. கோஷ்டிகளும் குழுக்களும் நெருங்கி சிலதாகுமா? இல்லையேல் மேலும் பலதாகுமா?
6. இந்து மதத்தின் மெய்யியல் உருவகங்கள்
7. வெப்பமடைந்துவரும் கோளம் பூகோளத்தவர்களுக்கு ஒரு சவால்
8. நூல் திறனாய்வு—பஞ்சமர் கே. டானியல்
9. பாலியல் விவகாரங்களில் விஞ்ஞான நோக்கற்ற சில சமூக விழுமியங்கள்.
10. மதமாற்றத்தின் சமூக விளைவுகள்
11. திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா ஒரு குடிப் பொதுமைவாதியா (Populist)


படிப்பகம்

www.padippakam.com

# திட்டச் சுருக்கம்
# "சமூக விஞ்ஞான சுடர்"

## முன் வைக்கும் அமைப்பின் பெயர்:

சமூக ~~அறிவியல்~~ விஞ்ஞான வெளியீட்டகம்.

KOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

## நோக்கம்

சமூக அறிவியல் மாணவர்களினதும், சமூக விவகாரங்களில் நடைமுறை ஈடுபாடும் திறனாய்வு மனப்பான்மையும் உள்ளோர்களினதும் அறிவு வளர்ச்சிக்கு துணைபுரியக் கூடிய முறையில் சமூக அறிவியற் சுடர் என்னும் சமூக அறிவிதழ் (Social Science Journal) வெளியிடல். இது ஒரு அரசியற் சஞ்சிகையோ செய்தித்தாளோ அல்ல. சமூக பிரச்சனைகளை அறிவியற் கண்ணோட்டத்தில் நோக்கிப் புரிந்து கொள்ள துணைபுரியும் அறிவிதழாகும்.

## நோக்கத்தை ஆக்குவித்த புறநிலைமை

கடந்த சுமார் 10 வருடங்களாக இலங்கைத் தீவின் அறிவியல் வளர்ச்சி வேகம் கணிசமானளவு குன்றிவருகின்றது. இதற்கான காரணங்கள் ஒன்று இரண்டல்ல; அவை பற்பல. இக் காரணங்கள் தன்னந் தனியனாக எளிமையான முறையில் தொங்கிக்கொண்டிருக்கவில்லை. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஒரு சிக்கலான உயிரிய முழுமையாக (organic whole) செயற்பட்டு வருகின்றன. நாட்டில் எங்கும் பரவி வளர்ந்துவரும் இராணுவ மயமாக்கற் செயற்பாடு: இளம் வயதினர் மிக கீழ்மட்ட பயிற்றப்படாத தொழிலாளர்களாக அந்நிய நாடுகளுக்கு படையெடுத்து வரல்: நாட்டில் நிலவும் அசம்பாவிதங்களினால் முறைசார் கல்வி நிறுவனங்கள் ஒரு சீரான முறையில் செயற்பட முடியாதுள்ள நிலைமை: நுட்பவியற் கல்வி நிறுவனங்கள் தனியார் வசமாகி நகரத்தில் மையங்கொண்டு வளர்ந்து வரல்; ஆகியவை இக் காரணிகளுள் பிரதானமானவையாகும்.

www.padippakam.com

சமூகத்தின் அறிவியல் வளர்ச்சி தடைபட்டு வரும் அதேவேளையில் மறுபுறத்தில் சமூக அறிவியல் உட்பட ஏனைய அனைத்துவகை கல்விஞானங்களும் வளர்வதற்கான தேவைகள் அதிகரித்து வருகின்றன. பல தசாப்தங்களாக நாட்டின் அரசியலாளர்களாகவும், கல்விமான்களாகவும் வீற்றிருந்த தலைவர்கள் ஒதுக்கப்பட்டு வருகிறார்கள். சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு இளம் சந்ததியினரின் கரங்களை, அவர்கள் அதற்கு தயாரிக்கப்படுமுன்னதாகவே வந்தடைந்து வருகின்றது. இயலாமை, போதாமை ஆகியவை உணரப்பட்டு வருகின்றன சமூக அறிவியற் தாகம் பரவலாக எங்கும் வியாபித்து வருகின்றது. இராணுவ பூசல்களும் சந்தேகங்களும் உள்ளதன் காரணத்தால் இத்தாகத்தை தீர்பதற்கான வழிவகைகளும் ஒழுங்கு முறைகளும் மிகப் பலவீனமான தாகி வருகின்றது. ஒன்றையொன்று எதிர்க்கும் அதே வேளை ஒன்றை என்று தூண்டிவிடும் எமது சமூக முரண் இணைகளில் (Paradox) இதுவும் ஒன்றாகவுள்ளது.

எவ்விதமிருந்தாலும், மிகுந்த சிரமத்தின் மத்தியில் இத் தாகம் தீர்ப்பதற்கான செயற்பாடுகள் ஆங்காங்கே தோன்றி வளர்ந்து வருகின்றன. எமது அறிவிதழும் இத் தகைய முயற்சிகளில் ஒன்றாக இருக்கும்.

## திட்ட அமுலாக்கம் :-

சமூக அறிவியற் துறைக் கல்வியும், ஞானமும் உள்ளடக்கிய துறைகளில் கீழ்க்கண்டவை முக்கியதத்துவம் வாய்ந்தவைகளாகும். அரசறிவியல், பொருளியல், வரலாற்றியல் உளவியல், சமூக உளவியல், ஒழுக்கவியல், மானுடவியல் சமூகவியல், உயிரியலின் சிலபகுதிகள், இறையியல், சட்டவியல், யுத்தவியல் ஆகியவையாகும். கிரேக்கஞானி அரிஸ்ரோட்டில் அரசியலறிவியலைத் தலைசிறந்த விஞ்ஞானம் (Master Science) எனக்கூறினர். இது தவறான கூற்றல்ல. சுடர் இவ்விவகாரங்களில் தனது கவனத்தைச் செலுத்தும்.

இவைதவிர இயற்கை விஞ்ஞானம், சமூக அறிவியல் ஆகிய இருதுறைகளாலும் செழுமைப்படுத்தப்பட்டு இரு



படிப்பகம்

www.padippakam.com

துறைகளையும் செழுமைப்படுத்தி; இரு துறைகளுடன் இணைந்தும் அதேநேரத்தில் இருதுறைகளில் இருந்து விலகித் தனித்தும்; தனக்கென்று வரையறுத்த எல்லைகள் இல்லாது பிரபஞ்சம் அனைத்தையும் தழுவிநிற்கும் மெய்யியல் "சுடர்" இன்கவனத்துக்குரிய மற்றைய விடயமாகும்.

இவ்வறிவிதழ் காலாண்டு இதழாக வெளிவரும் 1990-ம் ஆண்டு மாசி மாதக்கடைசிக்கு முன்பாக 1-வது இதழ் வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் நாட்டின் தற்போதைய அரசியல் பதட்ட நிலைமையைக் கணக்கிற்கொண்டு இவ்வெளியீட்டகம் ஐவருக்கு கூடாத அங்கத்தவர்களைக்கொண்ட ஒரு மூடிய அமைப்பாகவே இருக்கும்.

"சுடர்" ஆசிரியரே வெளியீட்டகத்தின் நிர்வாகியாகவும் கடமைபுரிவர். வெளியீட்டகத்தின் அனைத்துக் கடமைகளுக்கும் இவரே பொறுப்பாவார்.

"சுடர்" ஒத்துழைப்பாளர்குளாம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் ஒரு ஆரம்ப நடவடிக்கையாக முதலாவது இதழின் உள்ளடக்கங்களின் சாராம்சம் முன்கூட்டியே விநியோகிக்கப்படும். அது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## வரவு செலவுப் பிரச்சனைகள் :-

அறிவிதழ் வெளிக்கொணர்வதற்கான செலவு பதிப்பிதச்செலவு மாத்திரமல்ல, விநியோகம், விளம்பரம், அறிவுடம்படுப்பு (Communication) வெளியீட்டக நடத்துதற் செலவு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். அதனால் அறிவிதழின் உற்பத்திச்செலவினம் அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கும்; ஆனால் இன்றைய பொருளாதார நிலைமையில் பதிப்பிதச் செலவுதொகைதானும் கூட விற்பனவுமூலம் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆகையால் நன்கொடைகளும் பொளாதார ஒத்துழைப்புகளும் தொடர்ச்சியாக அவசியப்பட்டே தீரும் என்பதை குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

அனைத்து வகையான ஒத்துழைப்புகளையும், ஆக்க பூர்வமான விமர்சனங்களையும், நிதிவகையான நன்கொடைகளையும் வேண்டுகிறோம், கோரிநிற்கிறோம், வரவேற்கிறோம்.

இவ்வண்ணம்

**அ. கௌரிகாந்தன்**

நிர்வாகி.

சமூக விஞ்ஞான வெளியீட்டகம்



படிப்பகம்

www.padippakam.com

## உள்ளடக்கச் சுருக்கம்

## 3. மனிதனும் மிருகமும்

இக்கட்டுரை மனிதன் இறைவனின் தனிவிசேடப் படைப்பு என்ற கருத்தைப் பலவீனப்படுத்தி, உளவியல் கோணத்தில் இருந்து டார்வினஸத்தை செழுமைப்படுத்தவும்.

உயிரிய தேவைகளையும், உயிரிய—உடலிய தேவைகளையும் கொண்ட இயற்கைய உந்துக்களே மனித நடத்தையை தீர்மானிப்பதில் மேலோங்கிய தீர்விக் கூறுகளாக (Determinal Factors) உள்ளன என்ற இயல்பூக்க வாதத்தை திறனாய்வுக்குள்ளாக்கவும். (சிக்மன் ஃபிராயிடஸமும் ஒரு இயல்பூக்க வாதமே)

மனித நடத்தை மனிதன் வாழும் சுற்றுச்சூழலின் நேரடி, எளிமைப் பிரதிபலிப்பு மாத்திரமேயாகும் என்ற நடத்தைக் கொளகையினரதும் மனிதவியலிரினதும் வாதங்களை நிராகரிக்கவும்.

சமூக பொருளாதாரம் மாத்திரந்தான் மனித நடத்தையின் ஒரே அடிப்படை என்ற "பொருளாதார மாக்ஸிஸ வாதிகளின்" கருத்தை நிராகரிக்கவும். முயற்சி மேற்கொள்ளும்.

## 4. சமூகச்சிதைவை ஈடுசெய்ய காந்தியத்தீர்வு.

வளர்முக நாடுகளின் சமூக அமைப்பின் மேலாண்மை மிகு தீர்வுக்கூறுன திணிக்கப்பட்ட திரள்உற்பத்தி (Enforced mass production) சமூக சிதைவுக்கும் சீரழிவுக்கும் காரணமாய் அமைகின்றது. இதனுல் திரள் உற்பத்திக்கு எதிரான வெறுப்பு சிறு உற்பத்தியாளர்கள் மத்தியில் திரள் கொள்கிறது. இவர்களைக் கவரும் அரசியற் தலைவர்களும் மெய்யியலாளர்களும் (Philosphers) தோன்றுகிறுர்கள். இவர்கள் முதலாளித்துவம் முதலாளித்துவத்திற்கு முன்னைய சமூக விழுமியங்கள் ஆகிய இருகால்களின் துணைகொண்டும் நடக்க மக்களை வழிநடத்த முயற்சிக்கிறுர்கள். இவ்இரண்



படிப்பகம்

டிற்கும் இடையில் பரஸ்பர எதிரில்லாத ஒரு சமூக உறவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அதன் இந்திய வடிவம்தான் காந்தியம்.

காந்தியத்தின் இத்தன்மையை மிக இலகுவில் வெளிக் கொணரும் காந்திய ஆதரவாளர் திரு. V. V. அகோல்கர் M. A. (ஆமதாபாத் குஜராத் கல்லூரித் தத்துவத் துறைத் தலைவர்) அவர்களின் கட்டுரை விமர்சனத்துடன் பிரசுரிக் கப்படும்.

## 5. கோஸ்டிகளும் குழுக்களும் நெருங்கிச் சில தாகுமா இல்லையேல் மேலும் பலதாகுமா?

இலங்கை உட்பட அனைத்து நவ-காலனிகள் நாடுக ளின் அரசியற் போக்கையும் ஆளுவோரின் அரசியற்போக்கு ஆளப்படுவோரின் அரசியற்போக்கு என இரண்டாக நோக் கினால் இவ்விரண்டும் தத்தமக்குள் பல்வேறு கோஸ்டிகளாக வும், குழுக்களாகவும் பிரிந்துள்ளமையும் இவர்கள் தத்தமக் குள் மோதுதலைக் கொண்டவர்களாக உள்ளமையையும் காணக்கூடியதாய் உள்ளது. இது நவ-காலனிய விஸத்தின் பொது விதியா?

ஆம் இந்நாடுகளில் நிலவும் புறஎல்லைவய (Periferal Capitilasim) முதலாளித்துவ முறைமையின் சமூக சிறப் பியற்பண்புகளில் Social Charchterstic) இதுவும் ஒன்றா கும்.

இக்கட்டுரை இக்கருத்தை நிரூபிக்க முற்படுவதுடன் சமூக முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவர்கள் இத்தனிச் சிறப்பியற் பண்பின் நியதிகளை வுகளை எதிர்கொள்வது எவ் விதம் என்பது சம்பந்தமாகவும் வாசகர்களின் கவனத்தை திருப்ப முற்படுகின்றது.

## 6. இந்து மதத்தின் மெய்யியல் உருவங்கள்;

மதம் வெறுமனே ஒரு மீ இயற்கை சக்தி வழிபாட் டுக் கோட்பாடு மாத்திரமல்ல, அது தனக்குள் பலஉட்கூறு

www.padippakam.com

களைக்கொண்டது. அதிலும் குறிப்பாக இயற்கை வழிபாட்டுக் காலந்தொட்டு வளர்ந்துவரும் மதங்கள் மிகச் சிக்கலானவை. பலவுட்கூறுகளின் தொகுப்பினால் அமைந்தவையாகும். மெய்யியலும் இதில் ஒன்றாகும். குறிப்பாக இந்துநாகரிகத்தைப் பொறுத்தவரையில் இங்கு இயற்கை விஞ்ஞானம், சமூக அறிவியல் ஆகிய இரு துறைகளையும் தனித்தனியாக வளர்க்க முற்பட்டதையும் விட இவற்றை மெய்யியலுடன் இணைத்து வளர்க்கவே அதிகம் முயற்சிக்கப் பட்டுள்ளது.

ஆய்வுகூட பரிசோதனைகளின்மையும், அவதானிப்புக்கான (Observation) நுட்பவியல் போதியளவு வளராமையும், விஞ்ஞானத்தின் பல்வேறு கிளைகளும் துல்லியமாக பிரிபட்டு வளராதிருந்தமையும், பொதுமக்களின் அறிவியல் மட்டம் மிகத்தாழ்ந்ததாய் இருந்தமையும் மெய்யியல் அதிகம் சார்ந்திருந்ததற்கும் அதுநியாயங்காட்டி விளக்கப்படுவதை கடினமாக்கியதற்குமான (Rationalize) காரணங்களாக இருந்திருக்கலாம்.

இதனால் சிலமுடிவுகளையும், கோட்பாடுகளையும் கருதுகோள்களையும் (hyphothisis) மதக்கோட்பாடாகவும், சமூகச் சடங்குகளாகவும், மரபுகளாகவும், மதக் குறியீடுகளாகவும், புராணங்களாகவும், கருத்தேற்றம் (Suggestion) பெற்றுள்ளன. இவைகள் எல்லாம் சிலமெய்யியல் முடிவுகளை முன்வைப்பதற்கும் கருத்தேற்றம் பெறவைப்பதற்குமான ஊடகங்களாகவும், ஒருவகை சமூக வன்மைகளாகவும் பயன்பட்டன. இம்மெய்யியல் உள்ளடக்கங்களை இவ்வூடகங்களில் இருந்து பிரித்தெடுக்கவேண்டும். கருத்தேற்றம் பெற்றுள்ள இவற்றை கனவுடை விளக்கமாக்க வேண்டும். புரிந்துகொள்ள வேண்டும். இவற்றை ஏற்பதா நிராகரிப்பதா என்பது இதை அடுத்து வரவேண்டியதாகும்.

இந்த அர்த்தத்தில் இந்து சமயத்தில் பொதிந்துள்ள மெய்யியலை புரிந்துகொள்ள முற்படுவதே இக்குறிப்பின் நோக்கமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## 7. வெப்பமடைந்துவரும் கோளம் பூகோளத் தவர்களுக்கு ஒரு சவால்

கோளம் வெப்பமடைந்து வரும் காரணத்தையும் அதன் விளைவையும் விளக்கல். இயற்கையின் இயற்கைச் சமநிலை மனிதனால் சீர்கெடுக்கப்படுவதையும் மனிதனின் இத் தவறான நடவடிக்கைக்கான காரணத்தையும் ஆராய்தல்.

## 8. பாலியல் விவகாரங்களில் விஞ்ஞான நோக் கற்ற சில சமூக விழுமியங்கள்

ஒருபால் சேர்க்கை இயற்கை விரோதமானதா? முதி யோர் காதல் ஒரு சமூக ஒழுங்கீனமா? தற்காமம் (Mastur- bation) ஒரு அறவொழுக்க மீறலா? மனித மறு உற்பத்தியை நோக்கமாக கொள்ளாத காதல் ஒரு புரட்சிக் கொள்கையா? பாலியல் உறவுக்கு குடும்பத்தால் ஆவதென்ன? மாதவிடாய் ஒரு தீட்டா? போன்ற விவகாரங்கள் அலசப்படும்.

## 9. மதமாற்றத்தின் சமூக விளைவுகள்

மதமாற்றம் இருவகைப்பட்டது. ஒன்று நம்பிக்கை களில் ஏற்படும் தன்மைமாற்றங்கள்: இரண்டாவது, சமூக சமூக மேல்நிலையாக்கத்தை நோக்கமாக கொண்டவை. இரண் டாவது வகை மதமாற்றம் சமூக தேக்க நிலையையும், தற் சார்புத்தன்மைக் குலைப்பையும் ஏற்படுத்தும்

இக் கட்டுரை இவ்விரு விடயத்தையும் ஆராயும்

## 10. திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா ஒரு குடிப்பொதுமை வாதியா (Populist)

குடிப் பொதுமை வாதம் “ஜனரஞ்சக வாதம்” ஆகிய இரு வெவ்வேறு அரசியற் போக்குகளைப்பற்றிய வாதவிவா தங்கள் எமது நாட்டில் போதியளவு மேற்க் கொள்ளப்பட வில்லை, குடிப்பொதுமை வாதத்தை ஒரு அருவ வடிவில் விளக்க முற்படாமல் ஒருஸ்தூல விடயபற்றிய ஆய்வின் மூலம் விளக்க முயச்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கமா கும் S. W. R. D. பண்டாரநாயக்காவின் 1950-ம் ஆண் டைய அரசியல் கொள்கைகள் ஒருமாதிரி ஆய்வாக (Case Stidy) எடுத்துக் கொள்ளப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

**தொடர்பு முகவரி:**

*நிர்வாகி,*
**சமூக விஞ்ஞான வெளியீட்டகம்**
*நியூ லங்கா புஸ்தகசாலை,*
*கண்டி வீதி,*
**கிளிநொச்சி.**

**மாற்றுத் தொடர்பு விலாசம்:**

*Director:*
**Social Science Publishers,**
c/o Gamini Yappa
ACFOD-ACT Member,
Niyangoda,
Kuburaegama,
Via KANDY.

*சர்வசக்தி அச்சகம், குருகுலம் - கிளிநொச்சி.*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்